மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்
முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.ல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்
2024 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 8 ம் நாள் வியாழக்கிழமை
இடை மனு எண்.1/2023
அசல் வழக்கு எண்.820/2017

1. K.S.கந்தசாமி
2. துரைராஜ் ...மனுதாரர்கள்/ வாதிகள்

//எதிர்//

1. K.S.சுப்பிரமணியம்

2. தங்கராஜ்

3. ஜெயக்குமார் ...எதிர்மனுதாரர்கள்/ பிரதி வாதிகள்

இந்த வழக்கானது 29.01.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஸ்ரீசித்ராதேவி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.திருநாவுக்கரசு, அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

மனுச்சொத்தை அளவீடு செய்ய சூலூர் காவல்துறை ஆய்வாளரை பாதுகாப்பு வழங்க உத்தரவு செய்ய வேண்டுமாறு மனுதாரரால் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1. மனுதாரர் மேற்படி வழக்கில் மேதகு நீதிமன்றத்தில் மனுசொத்தை அளவீடு செய்து இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய ஒரு நீதிமன்ற ஆணையரை நியமிக்கும்படி கோரியிருந்தார். அதனடிப்படையில் மேதகு நீதிமன்றம் திரு.மோகன், வழக்கறிஞர் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமித்து உத்தரவு செய்திருந்தது.

அவரின் மேற்பார்வையில் சூலூர் தாலுக்கா நில அளவையர் மேற்படி மனுச்சொத்தை கடந்த 22.12.2022 தேதியன்று முதல் முறையாக மனுச்சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்ய சென்ற போது எதிர்மனுதாரர்கள் தகாத வார்த்தைகள் பேசி நில அளவீடு செய்ய நில அளவையரும், மேதகு நீதிமன்ற ஆணையரையும், இடையூறு செய்த காரணத்தினால் அன்று நில அளவீடு செய்ய இயலவில்லை.

1.2. இந்த தகவலை மேதகு நீதிமன்றத்தில், நீதிமன்ற ஆணையர் தெரிவித்த காரணத்தினால் மேதகு நீதிமன்றம் மனுச்சொத்தில் பௌதீக அமைப்புகளை பார்வையிட்டு அளவீடு செய்யும் பொழுது அதனை காணொளி (Video) காட்சி மூலம் பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்திருந்தது அந்த உத்தரவின் அடிப்படையில் காணொலி (Video) எடுக்கும் பொழுது எதிர்மனுதாரர்கள் கடுமையாக எதிர்த்து ஆட்சேபணை செய்து நில அளவீடு செய்யவோ, காணொலி (Video) பதிவு செய்யவோ கூடாதென தகாத வார்த்தைகள் பேசி நீதிமன்ற ஆணையரையும் மற்றும் நில அளவையரையும் பணி செய்யவிடாமல் தடுத்து இடையூறு செய்தார்கள்.

1.3. ஆகவே மனுச்சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்ய சூலூர் காவல் துறை ஆய்வாளர் அவர்களின் துணையுடன் பாதுகாப்பாக பார்வையிட்டு அளவீடு செய்ய உத்தரவு செய்ய வேண்டுமாறு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>2). 1 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்:</u>

2.1). 22.12.2024 தேதியன்று மனு சொத்தை நீதிமன்ற ஆணையாளர் சூலூர் நில அளவையருடன் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வந்திருந்த பொழுது இந்த எதிர்மனுதாரர் நில அளவையருடன் சண்டை போட்டதாகவும், தகாத வார்த்தைகள் பேசியதாகவும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவைகள் ஆகும்.

2.2). மேலும் வீடியோ காட்சிகள் செய்ய நீதிமன்ற உத்திரவுகள் ஏதும் இல்லாததால் வீடியோ காட்சிகள் எடுக்காமல் நில அளவுகள் செய்ய வேண்டும் என்று நீதிமன்ற ஆணையாளரிடம் கூறவே நில அளவைகள்

செய்யாமல் அவர் திரும்பி விட்டார். இது குறித்து இந்த எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார் என்றும் சமர்பித்துக்கொள்கிறார்.

2.3). இம்மனுவில் கூறியுள்ளது போல காவல்துறை பாதுகாப்பு எதுவும் தேவையில்லை எனவும், இம்மனுவிற்கு சட்டப்படியான எந்த முகாந்திரமும் இல்லை என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

3). தீர்வுக்குரியப் பிரச்சனை:

பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4). பிரச்சனைக்குத் தீர்வு:

4.1. மனுதாரர் அசல் வழக்கை செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து இடை மனு எண்.252/2017 நீதிமன்ற ஆணையர் மூலம் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டு அதில் நீதிமன்ற ஆணையர் திரு.மோகன் குமார் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த சூழ்நிலையில் கடந்த 27.09.2023 ல் நீதிமன்ற ஆணையர் நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் பிரதிவாதியின் மகன் வழக்கு சொத்தை பார்வையிட அனுமதிக்க மறுக்கிறார் என்று குறிப்பாணை தாக்கல் செய்தார் அதன் பின்னிட்டு மனுதாரர் இந்த மனுவை காவல் துறை உதவியுடன் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடக் கோரி தாக்கல் செய்துள்ளார்.

4.2. இந்த வழக்கு 2016 ல் தாக்கல் செய்து இன்று வரை நிலுவையில் உள்ளது. மேற்படி இடை மனு 252/2017 ல் அசல் வழக்குடன் 2016 ல் தாக்கல் செய்யப்பட்டு சூலூர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட பின்னிட்டு இன்று வரை முடித்துவைக்கப்படாமலும் நிலுவையில் உள்ளது. மேலும் காலதாமதத்தை தவிர்க்க வழக்கில் இருதரப்பினர்களுக்கு இடையே இருக்கும் பிரச்சினைக்கு இறுதியாக தீர்வு காணும் பொருட்டு இம்மனு அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8ம் நாள் வியாழக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2024.02.21 17:48:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2024.02.21 17:48:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.No.1/2023 in
OS.820/2017 in
Dated:08.02.2024
DMC, Sulur.